Tamilmanam – International Research Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 3049-0723
pISSN:3107-7781

தமிழ்மணம்
Peer-reviewed · Open access · Google Scholar · Crossref DOI
SJIF Impact Factor 3.5 · Monthly
Vol. 12, No. 06 (2026) p573 TIRJTS-2026-0043
DOI: 10.63300/tamilmanam.v12i06.33

‘நீவாடு’ புதினத்தில் கன்னியாகுமரி மாவட்டக் கடலோடிகளின் கடல்சார் பண்பாட்டுப் பதிவுகள் – ஓர் ஆய்வு

Maritime Cultural Records of the Fisherfolk of Kanyakumari District in the Novel ‘Neevaadu’: A Study

ஜா. வெர்ஜின் ஆன்றணி ஜார்ஜ்[1,*iD], முனைவர். ஜா.ஞா. ஜோணி ஜெபமலர்[2]
[1] முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவெண் : 2511309011001, தமிழாய்வு மையம், முஸ்லிம் கலைக்கல்லூரி, திருவிதாங்கோடு – 629174.
[2] உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர், தமிழாய்வு மையம், முஸ்லிம் கலைக்கல்லூரி, திருவிதாங்கோடு – 629174.
***Corresponding author:** ஜா. வெர்ஜின் ஆன்றணி ஜார்ஜ், antonyvergin@gmail.com
ORCID iD: ஜா. வெர்ஜின் ஆன்றணி ஜார்ஜ் https://orcid.org/0009-0003-6532-2764

ARTICLE INFO

Article history
Received: 1 November 2026
Revised: 3 November 2026
Accepted: 5 November 2026

Article ID
TIRJTS-2026-0043

Peer review
Double-blind peer review

Keywords
Keywords: Neevaadu
Kanyakumari District
Selaali
Kaniyam
Catamaran
Oravuthaan.திறவுச்சொற்கள்: நீவாடு
கன்னியாகுமரி மாவட்டம்
சேலாளி
கணியம்
கட்டுமரம்
ஒறவுத்தான்.

ABSTRACT

The fishermen living along the southwestern coastal region of Tamil Nadu, particularly in Kanyakumari district, possess a unique maritime culture and traditional knowledge. Through their generational experiential knowledge, they understand the sea, winds, ocean currents, and seasonal changes and engage in fishing activities. Their technological knowledge, regional dialect, social relationships, religious beliefs, and struggles of everyday life have been documented in contemporary literary works. In this context, the novel Neevaadu, written by Kurumpanai C. Berlin, a writer from Kanyakumari district, extensively records the lifestyle and maritime culture of the fishermen of Kanyakumari district. The objective of this article is to examine the sea's subsurface current known as ‘Neevaadu’, the ‘Selaali’ tradition, the traditional navigation technique of identifying ‘Kaniyam’, the structure of catamarans, different types of fishing nets, fishing methods, collective labour, the system of sharing the fish catch, the ‘Oravuthaan’ relationship that transcends caste and religious boundaries, religious beliefs, and the struggles of the fishermen in their everyday lives.

How to cite this article: ஜா. வெர்ஜின் ஆன்றணி ஜார்ஜ், & முனைவர். ஜா.ஞா. ஜோணி ஜெபமலர் (2026). ‘நீவாடு’ புதினத்தில் கன்னியாகுமரி மாவட்டக் கடலோடிகளின் கடல்சார் பண்பாட்டுப் பதிவுகள் – ஓர் ஆய்வு. *Tamilmanam – International Research Journal of Tamil Studies*, *12*(06), 573. https://doi.org/10.63300/tamilmanam.v12i06.33
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

ஆய்வுச் சுருக்கம்

தமிழகத்தின் தென்மேற்குக் கடற்கரைப் பகுதியான கன்னியாகுமரி மாவட்டத்தில் வாழும் கடலோடிகள் தனித்துவமான கடல்சார் பண்பாட்டையும் மரபார்ந்த அறிவையும் கொண்டுள்ளனர். கடல், காற்று, நீரோட்டம், பருவகால மாற்றங்கள் ஆகியவற்றைத் தங்களின் தலைமுறை அனுபவ அறிவின் மூலம் அறிந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களின் தொழில்நுட்ப அறிவு, வட்டார மொழி, சமூக உறவுகள், சமய நம்பிக்கைகள் மற்றும் வாழ்வியல் போராட்டங்கள் ஆகியவை சமகால இலக்கியப் படைப்புகளில் ஆவணப்படுத்தப்பட்டு வருகின்றன. அவ்வகையில், குமரி மாவட்டத்தைச் சேர்ந்த எழுத்தாளர் குறும்பனை சி. பெர்லின் எழுதிய 'நீவாடு' புதினம், கன்னியாகுமரி மாவட்டக் கடலோடிகளின் வாழ்வியலையும் கடல்சார் பண்பாட்டையும் விரிவாகப் பதிவு செய்துள்ளது. 'நீவாடு' என்னும் கடல் உள்நீரோட்டம், 'சேலாளி' மரபு, 'கணியம்' பிடிக்கும் பாரம்பரிய வழிசெலுத்தல் தொழில்நுட்பம், கட்டுமரத்தின் கட்டமைப்பு, வலையினங்கள், மீன்பிடி முறைகள், கூட்டுழைப்பு, மீன்பாட்டைப் பகிர்ந்தளிக்கும் முறை, சாதி–மதங்களைக் கடந்த 'ஒறவுத்தான்' உறவு, சமய நம்பிக்கைகள் மற்றும் கடலோடிகளின் வாழ்வியல் போராட்டங்கள் ஆகியவற்றை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திறவுச்சொற்கள்: நீவாடு, கன்னியாகுமரி மாவட்டம், சேலாளி, கணியம், கட்டுமரம், ஒறவுத்தான்.

1. **முன்னுரை**

தமிழ் இலக்கிய மரபில் கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் திணையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. தமிழ் இலக்கியங்கள் பலவற்றிலும் கடலும் கலமும் சாதாரணமாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதிலிருந்து, தமிழர்கள் கடலைத் தமது வாழ்க்கையின் ஒரு பகுதியாக அமைத்துக்கொண்டதை அறிய முடிகிறது என்கிறார் கடலோடி புதின ஆசிரியர் நரசய்யா.[1] கடலை வாழ்வாதாரமாகக் கொண்ட கன்னியாகுமரி மாவட்ட கடலோடிகள், கடலின் இயற்கை மாற்றங்களைத் தலைமுறை தலைமுறையாகக் கவனித்து, அதற்கேற்ப மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறும்பனை சி. பெர்லின் எழுதிய 'நீவாடு' புதினம், இக்கடலோடிகளின் வாழ்வியலையும் கடல்சார் பண்பாட்டையும் எடுத்துரைக்கிறது. கடல் சீற்றம், பொருளாதார நெருக்கடி போன்ற சவால்களுக்கு இடையே அவர்கள் எதிர்கொள்ளும் வாழ்வியல் போராட்டங்களைச் சித்தரிக்கும் இப்புதினம், யாகப்பனின் கடல் மரணத்துடன் நிறைவடைகிறது. இதன் வழியாக, கன்னியாகுமரி மாவட்டக் கடலோடிகளின் கடல்சார் அறிவு, தொழில்நுட்பம், பண்பாடு மற்றும் வாழ்வியல்

அனுபவங்களைப் பதிவு செய்யும் இலக்கிய ஆவணமாக 'நீவாடு' புதினம் விளங்குகிறது.

1.1. ஆய்வுச் சிக்கல்

கன்னியாகுமரி மாவட்டக் கடலோடிகள், தலைமுறை தலைமுறையாகப் பெற்ற அனுபவ அறிவின் மூலம் கடலின் தன்மை, நீரோட்டம், பருவநிலை மாற்றம் ஆகியவற்றைப் புரிந்துகொண்டு மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். குறும்பனை சி. பெர்லின் எழுதிய 'நீவாடு' புதினம், அவர்களின் மரபார்ந்த கடல்சார் அறிவு, தொழில்நுட்பம், மீன்பிடி முறைகள், கூட்டுழைப்பு, பகிர்வு மரபு மற்றும் சாதி, மதங்களைக் கடந்த சமூக உறவுகளை எவ்வாறு பதிவு செய்துள்ளது என்பதையும், நவீனமயமாக்கல் சூழலில் இவ்வாழ்வியல் கூறுகள் எவ்வாறு வெளிப்படுகின்றன என்பதையும் ஆராய்வதே இவ்வாய்வின் சிக்கலாகும்.

1.2. ஆய்வு நோக்கங்கள்

'நீவாடு', 'சேலாளி', 'கணியம்' போன்ற கடலோடிகளின் மரபார்ந்த கடல்சார் அறிவையும் வழிசெலுத்தல் முறைகளையும் ஆராய்தல்.

1. கட்டுமர அமைப்பு, வலை வகைகள், மீன்பிடி முறைகள், கூட்டுழைப்பு மற்றும் மீன்பாட்டுப் பகிர்வு ஆகியவற்றைப் பகுப்பாய்வு செய்தல்.
2. முக்குவர், நாடார் சமூகங்களுக்கு இடையிலான உறவுகள் மற்றும் பேரிடர் கால மீட்புப் பணிகளில் வெளிப்படும் மனிதநேயத்தை எடுத்துரைத்தல்.
3. கடலோடிகளின் கத்தோலிக்கச் சமய நம்பிக்கைகள், வழிபாட்டு மரபுகள் மற்றும் வட்டார வழக்குச் சொற்களின் சிறப்புகளைப் பதிவு செய்தல்.

1.3. ஆய்வு முறை

இவ்வாய்வு விளக்கமுறை மற்றும் ஒப்பீட்டு ஆய்வு முறைகளின் அடிப்படையில் அமைந்துள்ளது. குறும்பனை சி. பெர்லினின் 'நீவாடு' புதினம் முதன்மை ஆதாரமாகக் கொள்ளப்பட்டுள்ளது. நற்றிணை, கலித்தொகை, பட்டினப்பாலை போன்ற சங்க இலக்கியங்களும், கடல்சார் ஆய்வு நூல்கள், கடலோடி நரசய்யாவின் படைப்புகள், வறீதையா கான்ஸ்தந்தினின் கட்டுரைகள் மற்றும் நெய்தல் சொல்லகராதி போன்றவை துணை ஆதாரங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. புதினத்தில் இடம்பெறும் கடல்சார் அறிவு, தொழில்நுட்பம், வாழ்வியல் முறைகள், வட்டாரச் சொற்கள் மற்றும் சமூக உறவுகள் ஆகியவை சமூகவியல், மானிடவியல் கண்ணோட்டத்தில் ஆராயப்பட்டுள்ளன.

2. 'நீவாடு' – கடல்சார் கலைச்சொல்லின் விளக்கம்

'நீவாடு' என்பதற்கு கடல் நீரோட்டம் என்று பொருள் தருகிறது நெய்தல் சொல்லகராதி.[2] 'நீவாடு' என்பது கடலின் மேற்பரப்புக்குக் கீழே ஓடும்

உள்நீரோட்டத்தைக் குறிக்கும் கடலோர மக்களின் வட்டாரக் கலைச்சொல்லாகும். கடலின் போக்கு, காற்றின் திசை, நீரோட்டத்தின் வேகம் ஆகியவற்றைக் கடலோடிகள் தங்களின் தலைமுறை அனுபவத்தின் மூலம் கணித்து வருகின்றனர். அலைநீர் வற்றிய மணலைக் காலால் கிளறி, அதன் செறிவைக் கொண்டு நீரோட்டத்தின் தன்மையை அறியும் மரபு கடலோடிகளின் கடல்சார் அறிவுக்குச் சான்றாகும் என்று பேராசிரியர் வறீதையா கான்ஸ்தந்தின் குறிப்பிடுகிறார்.[3] இதன் மூலம், இயற்கையின் மாற்றங்களை உற்றுநோக்கி, அவற்றின் அடிப்படையில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் கடலோடிகளின் மரபார்ந்த பட்டறிவை அறிய முடிகிறது.

3. கடலோடிகளின் கடலறிவும் வானிலைக் கணிப்பும்

3.1. 'சேலாளி' மரபு

"கடலைப் புரிந்துகொள்வது என்பது, அதைப் பார்த்துக்கொண்டே இருப்பது"[4] என்ற ஃபெர்னாண்டு பிராடெலின் கூற்று கடலோடிகளின் வாழ்வியல் எதார்த்தத்தைப் பிரதிபலிக்கிறது. கடலின் இயல்பையும் பருவகால மாற்றங்களையும் உற்றுநோக்கிப் புரிந்துகொள்வது கடலோடிகளின் வாழ்வியலில் இன்றியமையாததாகும். இத்தகைய கடல்சார் அறிவு சங்ககாலத்திலிருந்தே நடைமுறையில் இருந்ததை நற்றிணை பாடல் எடுத்துரைக்கிறது.

"கானல் அம் சிறுகுடிக் கடல் மேம் பரதவர்
நீல் நிற புன்னைக் கொழு நிழல் அசைஇ,
தண் பெரும் பரப்பின் ஒண் பதம் நோக்கி" -(நற். 4:1–3)

கடலுக்குச் செல்ல ஏற்ற காலநிலையை எதிர்பார்த்துப் பரதவர்கள் காத்திருந்த செய்தியை இப்பாடல் விளக்குகிறது.

நீவாடு' புதினம், கடல், மழை, புயல், அலைகளின் வேகம், மீன்பாடு ஆகியவற்றைக் கணிக்கும் திறன் மிக்க மூத்த மீனவரை 'சேலாளி' (கடல் விஞ்ஞானி) எனக் குறிப்பிடுகிறது. கடல் சீற்றத்தைக் 'சேலுகேடு' என்றும் அழைக்கின்றனர்.

மழைக்காலத்தில் கடல் கொந்தளிப்புடன் காணப்படும்போது, தொழிலுக்குச் செல்லத் தயங்கும் சல்வதோரிடம் யாகப்பன் கடல்சார் அறிவியல் உண்மையைப் பின்வருமாறு விளக்குகிறார்:

"கடலு கொளத்தப் போல கெடந்தா என்ன மீன்பாடு கிட்டும்? குளுத்தியும், மழையும், சேலுகேடும், ஒறத்த வலுவும் இருந்தாதானே பாருக்கு உள்ள கெடக்குத மீனு, றாளெல்லாம் மேல வரும். அப்பதானே நம்ம தாத்து வலையிலையும், கூடுலயும் மீனும் றாளும் பெருவாதியா அம்புடும்."(நீவாடு, ப. 13)

மேற்கண்ட கூற்று, கடலின் அடியாழத்தில் உள்ள பாறைக் கூட்டங்களில் மறைந்திருக்கும் மீன்களும் இறால்களும் கடல் நீரோட்ட மாற்றத்தாலும்

கொந்தளிப்பாலும் மேல்மட்டத்திற்கு வரும் என்ற கடலியல் உண்மையை வெளிப்படுத்துகிறது. மேலும்,

"ஆனி ஆடி ஆத்தலும், தூத்தலும்னு பெரியவங்க சும்மாலா கணிச்சு வச்சிருக்காங்க. இந்த சேலுலதான் மீனு பெருவாரியா கடலு மேல்மட்டத்துலயும், கரையப்பாத்தும் வரும்." (நீவாடு, ப. 46)

என்ற சேலாளியின் கூற்று, பருவகாலத்திற்கும் மீன்வளத்திற்கும் இடையிலான தொடர்பை உணர்த்துகிறது.

3.2. 'கணியம்' பிடித்தல்

'கணி' என்ற வேர்ச்சொல்லுக்கு கணக்கிடுதல், அளவு குறித்தல், மற்றும் வானியல் அல்லது சோதிடம் அறிதல் ஆகிய பொருள்களைத் தருகிறது தமிழ் பேரகராதி.[5] நவீன திசைகாட்டிகளோ (Compass), செயற்கைக்கோள் வழிகாட்டிக் கருவிகளோ (GPS) இல்லாத காலகட்டத்தில், ஆழ்கடலில் பல மைல்கள் பயணித்து வலைகளையும் கூடுகளையும் அமிழ்த்திப் போடும் கடலோடிகள், மறுநாள் அதே இடத்தைத் துல்லியமாகக் கணக்கிட்டு கண்டறியப் பயன்படுத்தும் பாரம்பரிய வழிசெலுத்தல் தொழில்நுட்பம் 'கணியம் பிடித்தல்' எனப்படுகிறது.

கடலில் தாத்துவலையைப் போடும் இடத்தைக் குறிக்க, கரையில் உயர்ந்து நிற்கும் மலைமுகடு, ஊர்க் கோயிலின் முகப்புச் சிலுவை, வானத்து நட்சத்திரங்கள் ஆகியவற்றை ஒரே நேர்கோட்டில் பொருத்தி இடத்தை நிர்ணயிப்பர். இதனைப் புதின ஆசிரியர்,

"எங்கோ தூரத்தில் தெரியும் மலைமுகடும், கோயில் முகப்பில் இருக்கும் சிலுவையும் ஒன்றாக இணையும் நேர்கோட்டில் கணியம் பார்த்து மரத்தை வழியப் போட்டார்கள்." (நீவாடு, ப. 89)

என்று பதிவு செய்துள்ளார். உயர்ந்த பனைமரக் கூட்டங்களும் கணியம் காண்பதற்கான அடையாளங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.[6]

மழையும் இருளும் சூழ்ந்து மலைமுகடும் நட்சத்திரங்களும் மறையும்போது 'கணியம்' தவறிப்போவதும், அதனால் வலையைத் தேட முடியாமல் கடலோடிகள் தவிப்பதும் புதினத்தில் உயிரோட்டமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன.

4. கடல்சார் தொழில்நுட்பங்களும் மீன்பிடிக் கருவிகளும்

கன்னியாகுமரி மாவட்ட கடலோடிகளின் பாரம்பரியக் கடல்சார் கருவிகளும் அவற்றைப் பயன்படுத்தும் நுட்பங்களும் 'நீவாடு' புதினத்தில் மிகத் துல்லியமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

4.1. கட்டுமரத்தின் கட்டமைப்பும் உறுப்புகளும்

கடலோடிகளின் முதன்மையான உழைப்புக் கருவி 'கட்டுமரம்' ஆகும். கட்டுமரம் சங்க இலக்கியங்களில் 'புணை', 'திமில்' என்ற பெயர்களில் குறிப்பிடப்படுகிறது. கலித்தொகைக்கு உரை எழுதிய நா. சி. கந்தையா பிள்ளை, தமது *கலித்தொகை வசனம்* என்னும் நூலில் 'திமில்' என்பதைக் கட்டுமரம் என்று விளக்குகிறார்.[7] ஆங்கிலேயர்கள் 'CATAMARAM' என்ற ஆங்கிலச் சொல்லைத் தமிழர்களின் 'கட்டுமரம்' என்ற சொல்லிலிருந்தே பெற்றனர் என்பது கட்டுமரத்தின் தொன்மையையும் சிறப்பையும் காட்டுகிறது.[8]

நான்கு மரத்தடிகளை இணைத்துக் கட்டப்படும் கட்டுமரத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனிப் பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன:

- **அணியம்:** கட்டுமரத்தின் முன்பகுதி.
- **கடமரம்:** கட்டுமரத்தின் பின்பகுதி.
- **கடியா (கடியல்):** கட்டுமரத்தின் நான்கு தடிகளையும் ஒன்றாகச் சேர்த்துக் கட்டும்போது முன்பக்கத்திலும் பின்பக்கத்திலும் பொருத்தப்படும் செதுக்கிய பலகை.
- **தொளவை:** கட்டுமரத்தைச் செலுத்தப் பயன்படும் மூங்கிலைக் கீறிச் செதுக்கிய துடுப்பு.
- **பன்னா:** கட்டுமரம் வெயிலில் காய்ந்து வெடிக்காமலும் மழையில் நனையாமலும் பாதுகாப்பதற்காக மூடி வைக்கப்படும் கூடு போன்ற அமைப்பு.
- **ஏற்றினங்கள் (யாத்தினங்கள்):** கடலுக்குள் எடுத்துச் செல்லப்படும் வலை, கயிறு, கூடு உள்ளிட்ட தொழில் தளவாடங்கள்.

கடல் அலைகளின் சீற்றத்தைக் கணித்து, **"மூணாவது மாயிரியா சாஞ்சுவாறு கும்பாயிரி.... ரண்டாவது மாயிரியா அடிச்சு கரைக்கு வந்ததும் தள்ளணும்"** (நீவாடு, ப.77) என்று அலைகளின் எண்ணிக்கையைக் கணக்கிட்டு, அலை அடிவாரத்தைத் தாண்டிக் கட்டுமரத்தைச் செலுத்தும் நுட்பம் புதினத்தில் சிறப்பாக விவரிக்கப்பட்டுள்ளது. இது கடலோடிகள் கடலின் இயல்பையும் அலைகளின் வேகத்தையும் நன்கு அறிந்திருந்ததற்குச் சான்றாக அமைகிறது.

4.2. 'கோமா கட்டு' மற்றும் 'கல்றாள் கூடு' தொழில்நுட்பம்

கட்டுமரத்தில் வலைகளையும் கூடுகளையும் கட்டி வைக்கும் முறை கடலோடிகளின் தொழில்நுட்ப அறிவுக்குச் சான்றாகும். வலைகளை இறுக்கமாகக் கட்டும் வடக்கட்டுகள் 'வரிச்சை' எனப்படும். ஆனால், இறால் பிடிக்கும் கூடையை மட்டும் இறுக்கமாகக் கட்டாமல், 'கோமா கட்டு' என்ற சிறப்பு முடிச்சினால் கட்டுவார்கள். இது குறித்துப் புதினம் தரும் விளக்கம் வருமாறு:

"கோமா ஸ்டேஜில் இருக்கும் நோயாளி செத்துட்டானா... உயிரோட இருக்கானான்னு தெரியாம இருக்கிறது போல-இந்த கோமா கட்டும்!

கட்டியிருக்கா... கட்டாம இருக்கான்னு தெரியாம இருக்கும். ஒருவேள கடல்கூடி மரம் கவுந்தா அந்த கோமா கட்டு அவுந்து கூடு தனியா போய் கடலில் மிதக்கும். அலை அடித்து கூடை கரையில் கொண்டு ஒதுக்கும்." (நீவாடு, ப. 17)

இதேபோன்று, 'கல்றாள் கூடு' தயாரிக்கும் தொழில்நுட்பமும் மிக நுணுக்கமானது. தென்னை ஓலை மட்டையிலிருந்து நாரை உரித்தெடுத்து, நல்ல தண்ணீரில் ஊறவைத்து, வெயிலில் காயவைத்து, மீண்டும் கடல் நீரில் ஊறவைத்துப் பதப்படுத்துவார்கள். பின்னர், அரை அங்குலத்திற்கு அரை அங்குலம் அளவில் துளைகள் இருக்குமாறு ஐந்து அடி நீளம், மூன்று அடி அகலம், மூன்று அடி உயரத்தில் இக்கூடு முடையப்படும். இறாலும் மீனும் உள்ளே நுழைவதற்கு விசாலமாகவும், உள்ளே சென்ற பிறகு வெளியே வர முடியாதவாறு கீழ்நோக்கிச் சாய்ந்து ஒடுங்கிய வாசலுடனும் இக்கூடு அமைக்கப்பட்டிருக்கும்.

4.3. வலையினங்களும் மீன்பிடி முறைகளும்

"வடிக் கதிர் திரித்த வல் ஞாண்பெரு வலை" (நற்றிணை, 74:1) என்பது மீன் பிடிக்கும் வலை குறித்து, சங்க இலக்கியமான நற்றிணையில் இடம்பெறும் அடியாகும். மீன்களின் தன்மைக்கும் கடலின் ஆழத்திற்கும் ஏற்பப் பல்வேறு வலையினங்களைப் பயன்படுத்துவதை 'நீவாடு' புதினம் பதிவு செய்துள்ளது.

1. **சாளாவலை:** சாளை மீன்களைப் பிடிக்கும் வலை.
2. **கச்சாவலை:** நெத்திலி மீன்களைப் பிடிக்கும் வலை.
3. **றாள்வலை:** இறால்களைப் பிடிக்கும் வலை.
4. **தாத்துவலை:** முந்தைய நாள் கடலின் அடியில் கல்லைக் கட்டி அமிழ்த்தி வைத்துவிட்டு, மறுநாள் எடுக்கும் ஆழ்கடல் வலை.
5. **தட்டுமடி:** இரண்டு கட்டுமரங்கள் இணைந்து பெருவாரியான மீன்களை வளைத்துப் பிடிக்கும் பெரிய வலை அமைப்பு.
6. **ஓமலு:** பிடித்த மீன்களை நிறைத்து வைக்கும் பனை ஓலையால் செய்யப்பட்ட பெரிய வட்ட வடிவக் கூடை.

இவ்வாறு மீன்களின் வகை, கடலின் ஆழம், மீன்பிடிக்கும் இடம் ஆகியவற்றுக்கு ஏற்பத் தனித்தனியான வலைகளையும் கருவிகளையும் பயன்படுத்தும் தொழில்நுட்ப அறிவு கன்னியாகுமரி மாவட்டக் கடலோடிகளிடம் காணப்படுவதைப் புதினம் எடுத்துரைக்கிறது.

5. கடலோடிகளின் பகிர்தல் மரபு

5.1. கூட்டுழைப்பும் 'பங்கு பகிர்தல்' முறையும்

‘நீவாடு’ புதினம் கன்னியாகுமரி மாவட்டக் கடலோடிகளின் பொருளாதார வாழ்வியலில் நிலவும் கூட்டுழைப்பு முறையையும் பகிர்தல் பண்பாட்டையும் அழுத்தமாகப் பதிவு செய்கிறது.

யாகப்பனும் சல்வதோரும் இணைந்து தொழில் செய்யும்போது, வலையும் கட்டுமரமும் தனித்தனியே இருவருக்கும் சொந்தமானவையாக இருந்தாலும், “யாரு வலைக்காரன்? யாரு கூலிக்காரன்னு சொல்ல முடியாம ஒரு சமத்துவ தொழில்தான் செஞ்சிட்டிருந்தாங்க” (நீவாடு, ப. 14) எனப் புதினம் குறிப்பிடுகிறது. கடலில் இருந்து கொண்டுவரும் மீன்பாட்டைப் பங்கிடும் முறை அச்சமூகத்தின் கூட்டுறவுப் பொருளாதாரத்தைக் காட்டுகிறது.

- **கோயில் ஒமலு மற்றும் ஊர் வரி:** ஊர் வளர்ச்சிக்கும் திருச்சபைக்கும் வழங்கப்படும் முதல் பங்கு.
- **நாசுவன் படி:** ஊரின் சவரத் தொழிலாளியான நாவிதருக்கு மீன் வடிவில் வழங்கப்படும் பங்கு.
- **மெலிஞ்சி பங்கு:** கோயிலில் மணி அடிப்பவருக்கு வழங்கப்படும் மீன் பங்கு.

சமூகத்தில் உழைக்கும் பிற பிரிவினரின் வாழ்வாதாரத்தையும் தங்களின் மீன்பாட்டில் இணைத்துப் பாதுகாக்கும் உயரிய சமூகப் பொறுப்பு இதன் வழியாகப் புலப்படுகிறது.

5.2. சாதி–மதங்களைக் கடந்த ‘ஒறவுத்தான்’ பண்பாடு

கிறித்தவ மதத்தைச் சேர்ந்த கடலோடிகளான முக்குவர் சமூக மக்களுக்கும், அப்பகுதியில் விவசாயம் செய்யும் இந்து நாடார் சமூக மக்களுக்கும் இடையே நிலவிய குடும்ப உறவுமுறை **‘ஒறவுத்தான்’** என அழைக்கப்படுகிறது. சாதியாலும் மதத்தாலும் வேறுபட்டிருந்தாலும், இன்ப துன்பங்களிலும் இலாப நட்டங்களிலும் இவ்விரு சமூக மக்களும் ஒன்றாகப் பங்கெடுத்தனர்.

கடலிலிருந்து திரும்பும் முக்குவர்கள், கறிக்காக எடுத்து வைக்கும் மீனில் ஒரு பங்கினைத் தவறாமல் நாடார் ‘ஒறவுத்தான்’ குடும்பத்திற்கு வழங்குவர். பதிலுக்கு, நாடார்கள் தங்கள் விளைநிலங்களில் விளையும் கிழங்கு, பலாக்காய், மாங்காய், பனங்காய், முந்திரி, மற்றும் பதநீர் கள்ளை முக்குவ உறவினர்களுக்கு வழங்கி மகிழ்வர்.

சோரிச்சுப்பிள்ளையும் சவரியாரடிமையும் குளித்துவிட்டு நாகம்மை நாடாத்தியின் கொல்லாந்தோப்பில் கள்ளும் மஞ்சளும் சேர்த்து அவித்த சாவாளை மீனையும் கிழங்கையும் உண்டு மகிழும் காட்சி, மதநல்லிணக்கத்திற்கும் தமிழ் மண்ணின் பகிர்தல் பண்பாட்டிற்கும் சிறந்த இலக்கியச் சான்றாக அமைகிறது. (நீவாடு, ப. 26- 28)

5.3. பேரிடர் மீட்புப் பணியும் மனிதநேயமும்

தாமிரபரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, கரையோர மக்கள் தவித்தபோது, கடலோடிகள் தங்களின் கட்டுமரங்களை லாரிகளில் ஏற்றிச் சென்று உயிரைப் பணயம் வைத்து மக்களைக் காப்பாற்றுகின்றனர். இது சாதிப் பாகுபாடுகளைக் கடந்து மனித உயிர்களைக் காக்கும் அவர்களின் பரந்த மனப்பான்மையை வெளிப்படுத்துகிறது.

மேலும், மீட்புப் பணிக்காகத் தாசில்தார் வழங்கிய பணத்தை, **"எங்க சொந்தங்களுக்கு நாங்க செய்யுத உதவி இது. அதுக்கு விலைபேசி எங்க உதவியை கொச்சைப்படுத்தாதேங்க"**(நீவாடு, ப. 85) என்று யாகப்பன் மறுப்பது, கடலோடிகளின் அறவுணர்விற்குச் சான்றாக அமைகிறது.

6. சமய நம்பிக்கைகளும் வழிபாட்டு மரபுகளும்

சங்ககாலப் பரதவர்கள் சுறாவின் கொம்பினை நட்டு வழிபட்ட செய்தியை பட்டினப்பாலை அடிகளின் மூலம் அறிய முடிகிறது.

"சினைச் சுறவின் கோடு நட்டு
மனைச் சேர்த்திய வல் அணங்கினான்"
— (பட்டினப்பாலை, அடி. 86–87.)

இன்றைய காலச்சூழலில் கன்னியாகுமரி மாவட்டக் கடலோர மக்களின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான வாழ்வியல் சடங்குகள் கடலோடும் கத்தோலிக்கத் திருச்சபையோடும் இரண்டறக் கலந்துள்ளன.

கடலுக்குள் செல்லும் ஒவ்வொரு முறையும் கடல் நீரைத் தொட்டு, **"பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயராலே ஆமேன். சேசு மரி சூசையே எங்களை ரெச்சியும்"** என்று செபம் செய்து, கடலையும் கரையில் உள்ள கோயில் முகப்புச் சிலுவையையும் வணங்கிய பின்னரே கட்டுமரத்தை இறக்குகின்றனர். (நீவாடு, ப. 17)

தவக்காலத்தில் நாற்பது நாட்கள் உபவாசம் இருப்பது, கறுப்பு ஞாயிறன்று மூங்கில் தொளவையால் சிலுவை செய்து ஊரைச் சுற்றி 14 கோயில்களுக்குச் சிலுவைப் பாதை செல்வது ஆகிய சமயச் சடங்குகளும் புதினத்தில் விவரிக்கப்பட்டுள்ளன. (நீவாடு, ப. 67,68)

இதன் மூலம், கடலோடிகளின் சமய நம்பிக்கைகளும் தொழில் சார்ந்த வாழ்வியலும் ஒன்றோடொன்று தொடர்புடையதாக விளங்குவதை அறிய முடிகிறது.

7. நீவாடு' புதினத்தில் வட்டார வழக்குச் சொற்களும் பொருளும்

'நீவாடு' புதினத்தின் தனித்துவங்களில் ஒன்று, கன்னியாகுமரி மாவட்டக் கடலோர மக்களின் வட்டார மொழியையும் தொழில்சார் கலைச்சொற்களையும் இயல்பாகப் பதிவு செய்திருப்பதாகும்.

வகைப்பாடு	வட்டார வழக்குச் சொற்கள் / தொடர்கள்	பொருள் / விளக்கம்
தொழில் சார்ந்த சொற்கள்	சேலாளி	கடல் விஞ்ஞானி; காற்று, கடல், மழை, புயலைக் கணித்துச் சொல்பவர்
	கணியம்	அடையாளம்; நட்சத்திரம், மலை, சூரியன், சந்திரனை வைத்து இருப்பிடம் காண்பது
	நீவாடு	கடலின் உள் நீரோட்டம் (Sea current)
	மாயிரியா	கடல் அலை
	சேலுகேடு	பேரிடர்; காற்று, புயல், சூறாவளி, கடல் கொந்தளிப்பு
	தாத்துவலை	கடலில் முந்தின நாள் அமிழ்த்துப் போடும் வலை
	கோமா கட்டு	கட்டியது போலவும் கட்டாதது போலவும் இடப்படும் சிறப்பு முடிச்சு
	கடியா	கட்டுமரத்தின் நான்கு தடிகளையும் சேர்த்து முன்பின் வைத்துக் கட்டும் பலகை
	தொளவை	கட்டுமரம் செலுத்தப் பயன்படும் மூங்கிலால் செதுக்கப்பட்ட துடுப்பு
	ஓமலு	மீனை நிறைத்து வைக்கும் பனை ஓலையால் செய்யப்பட்ட பெரிய வட்ட வடிவக் கூடை
	கம்பா	கயிறு, வடம்
உறவு மற்றும் உணர்வு சார்ந்த சொற்கள்	கும்பாயிரி	நண்பன்,தோழன்,சகல முமானவன்

வகைப்பாடு	வட்டார வழக்குச் சொற்கள் / தொடர்கள்	பொருள் / விளக்கம்
	மூப்புலு	தாத்தா, அப்பா, வயது முதிர்ந்தவர்
	ஒறவுத்தான்	உறவுக்காரர் (குறிப்பாக நாடார் சமூகத்துடனான உறவுமுறை)
	வளத்தப்பா	வளர்த்த அப்பா, ஞானத்தகப்பன்

இவ்வட்டாரச் சொற்கள் வெறும் பேச்சு வழக்குச் சொற்களாக மட்டுமல்லாமல், கன்னியாகுமரி மாவட்டக் கடலோடிகளின் தொழில்சார் அறிவு, சமூக உறவுகள், பண்பாட்டு அடையாளம் ஆகியவற்றை வெளிப்படுத்தும் மொழிசார் ஆவணங்களாகவும் விளங்குகின்றன.

8. கடல் மரணமும் கடலோடிகளின் வாழ்வியல் நிதர்சனமும்

புதினத்தின் உச்சக்கட்டப் பகுதி, ஆறு நாட்கள் தொடர்ந்த கடல் கொந்தளிப்பிற்குப் பிறகு கடலுக்குள் சென்ற யாகப்பனின் மரணமாகும். ஐந்து நாட்களாகக் கடலுக்கு அடியில் கிடந்த தாத்துவலையையும் கல்றாள் கூட்டையும் மீட்காவிட்டால், அவை 'பேய்வலையாக' மாறி வாழ்வாதாரமே அழிந்துவிடும் என்ற கட்டாயத்தில், கலங்கலான ('தொளிக்கலர்') கடல் நீருக்குள் யாகப்பன் மூழ்கித் தேடுகிறார்.

ஆழ்கடலில் பாறை இடுக்கில் கால் மாட்டிக்கொண்ட யாகப்பன், அதிலிருந்து விடுபட முடியாமல் மூச்சுத் திணறி உயிரிழக்கிறார். உள்நீரோட்டமான 'நீவாடு' யாகப்பனின் சடலத்தை அடித்துச் சென்றுவிடுகிறது. ஊரே திரண்டு கடலில் சல்லடை போட்டுத் தேடியும் உடல் கிடைக்காத நிலையில்,

"கடலம்மா தன்னிடம் உயிரைப் பறிகொடுத்த எந்தச் சடலத்தையும் தனக்குள் வைத்துக்கொள்ள மாட்டாள். மூன்று நாட்களுக்குள் கரைக்குக் கொண்டுசேர்ப்பாள் என்ற நம்பிக்கையில் எல்லோரும் கரையைப் பார்த்துத் தொளந்தார்கள்." (நீவாடு, ப. 98)

என்ற வரிகள், கடலையே தாயாகவும், வாழ்வாதாரமாகவும், இறுதியில் மயானமாகவும் ஏற்றுக்கொள்ளும் கடலோடிகளின் வாழ்வியல் நிதர்சனத்தை அழுத்தமாக உணர்த்துகிறது.

9. முடிவுரை

குறும்பனை சி. பெர்லினின் 'நீவாடு' புதினம் கன்னியாகுமரி மாவட்டக் கடலோடிகளின் மரபார்ந்த கடலறிவு, 'சேலாளி', 'கணியம்' போன்ற வழிசார் தொழில்நுட்பங்கள், கட்டுமர அமைப்பு, மீன்பிடி முறைகள் ஆகியவற்றைப் பதிவு

செய்கிறது. மேலும், மீன்பாட்டுப் பகிர்வு, கூட்டுழைப்பு, ஒறவுத்தான் உறவு, பேரிடர் மீட்புப் பணி ஆகியவற்றின் வழியாக அவர்களின் சமூகப் பொறுப்பையும் மனிதநேயத்தையும் வெளிப்படுத்துகிறது. வட்டார மொழி, சமய நம்பிக்கைகள், வழிபாட்டு மரபுகள் ஆகியவற்றையும் எடுத்துரைக்கும் இப்புதினம், கடலோடிகளின் வாழ்வியல் மற்றும் பண்பாட்டை அறிய உதவும் முக்கியமான இலக்கிய ஆவணமாகத் திகழ்கிறது.

அடிக்குறிப்புகள்

1. நரசய்யா, *கடலோடி*, நான்காம் பதிப்பு, சென்னை: நிவேதிதா பதிப்பகம், 2023, ப. 139.

2. குறும்பனை சி. பெர்லின், *நெய்தல் சொல்லகராதி*, சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், 2020, ப. 100.

3. வறீதையா கான்ஸ்தந்தின், "கடலைக் கவனித்தல் எனும் கடற்குடிகளின் வாழ்க்கை | கூடு திரும்புதல் 24," *இந்து தமிழ் திசை*, 16.11.2024. இணைய முகவரி: https://www.hindutamil.in/news/supplements/uyir-moochi/1339887-about-sea-peoples-fishing-life-was-explained.html (அணுகிய நாள்: 17.11.2026).

4. Fernand Braudel, *The Mediterranean and the Mediterranean World in the Age of Philip II*, Vol. 1, trans. Siân Reynolds (Berkeley: University of California Press, 1995), p. 17.

5. சென்னைப் பல்கலைக்கழகம், *தமிழ்ப் பேரகராதி*, 'கணி', 'கணியன்' சொற்பதிவுகள், இணைய முகவரி: https://dsal.uchicago.edu/dictionaries/tamil-lex/ (அணுகிய நாள்: 17.11.2026).

6. வறீதையா கான்ஸ்தந்தின், கடற்கரையும் பனை மரப் பிணைப்பும் | கூடு திரும்புதல் - 23, *இந்து தமிழ் திசை* ,9.11.2024. இணைய முகவரி:https://www.hindutamil.in/news/supplements/uyir-moochi/1337390-about-beach-side-palm-tree.html (அணுகிய நாள்: 17.11.2026).

7. நா. சி. கந்தையா பிள்ளை, *கலித்தொகை வசனம்*, சென்னை: ஒற்றுமை நிலையம், 1941, ப. 198.

8. ஆ. பூபாலன், *தமிழர்களும் தொழில்நுட்பமும்*, சென்னை: VRB Publication Pvt. Ltd., மறுபதிப்பு, 2025, ப. 87.

துணைநூற்பட்டியல்

References

அடிக்குறிப்புகள்

நரசய்யா, கடலோடி, நான்காம் பதிப்பு, சென்னை: நிவேதிதா பதிப்பகம், 2023, ப. 139.

குறும்பனை சி. பெர்லின், நெய்தல் சொல்லகராதி, சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், 2020, ப. 100.

வறீதையா கான்ஸ்தந்தின், "கடலைக் கவனித்தல் எனும் கடற்குடிகளின் வாழ்க்கை | கூடு திரும்புதல் 24," இந்து தமிழ் திசை, 16.11.2024. இணைய முகவரி: https://www.hindutamil.in/news/supplements/uyir-moochi/1339887-about-sea-peoples-fishing-life-was-explained.html (அணுகிய நாள்: 17.11.2026).

Fernand Braudel, The Mediterranean and the Mediterranean World in the Age of Philip II, Vol. 1, trans. Siân Reynolds (Berkeley: University of California Press, 1995), p. 17.

சென்னைப் பல்கலைக்கழகம், தமிழ்ப் பேரகராதி, 'கணி', 'கணியன்' சொற்பதிவுகள், இணைய முகவரி: https://dsal.uchicago.edu/dictionaries/tamil-lex/ (அணுகிய நாள்: 17.11.2026).

வறீதையா கான்ஸ்தந்தின், கடற்கரையும் பனை மரப் பிணைப்பும் | கூடு திரும்புதல் - 23, இந்து தமிழ் திசை ,9.11.2024. இணைய முகவரி:https://www.hindutamil.in/news/supplements/uyir-moochi/1337390-about-beach-side-palm-tree.html (அணுகிய நாள்: 17.11.2026).

நா. சி. கந்தையா பிள்ளை, கலித்தொகை வசனம், சென்னை: ஒற்றுமை நிலையம், 1941, ப. 198.

ஆ. பூபாலன், தமிழர்களும் தொழில்நுட்பமும், சென்னை: VRB Publication Pvt. Ltd., மறுபதிப்பு, 2025, ப. 87.

துணைநூற்பட்டியல்

இராசமாணிக்கனார், மா. தமிழர் நாகரிகமும் பண்பாடும். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2008.

ஔவை துரைசாமிப் பிள்ளை (உரை). நற்றிணை (மூலமும் உரையும்). சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 2008.

குறும்பனை சி. பெர்லின். நீவாடு. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை, முதற்பதிப்பு, 2019.

மயிலை சீனி வேங்கடசாமி. பழங்காலத் தமிழர் வாணிகம். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1974.

மறைமலையடிகள். பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை. திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1957.

தி. முத்துக்கண்ணப்பர். சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம். அதிபத்தர் பதிப்பகம், சென்னை, 1978.

தொ. பரமசிவம். பண்பாட்டு அசைவுகள். காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2013.

புலியூர்க் கேசிகன் (உரை). அகநானூறு (மூலமும் உரையும்). பாரி நிலையம், சென்னை, 2012.